மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : தலைவர் அவர்களே, அந்த தூரம் இவைகளையெல்லாம் கணக்குப் போட்டுத்தான் சொல்ல வேண்டும். அவர்கள் சொல்கிறபடி குறைவான தூரமாக இருந்தால் அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 157,158 மற்றும் 159 ஆகியவை அமைச்சருடையவேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.
வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி யிடப்பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) முன் அனுமதியின்றி எழுப்பப்பெறும் பிரச்சினை

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர், தமிழகத்தில் ஆர். எஸ். எஸ். பயிற்சி நடத்தக் கூடாது என்று தடைவிதிக்கப்பட்டிருக்கிறதே

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் பயிற்சிகளைப் பற்றியெல்லாம் முறைப்படி அவையில் கொண்டு வர வேண்டும். பாயின்ட் ஆப் ஆர்டரில் அதுபற்றியெல்லாம் கேட்கக் கூடாது.

திரு. மு. அம்பிகாபதி : சபாநாயகருடைய கவனத்தை நேரிடையாக ஈர்க்கும் பொருட்டுத்தான், நான் அதை இங்கு எழுப்பினேன்.

மாண்புமிகு பேவைத் தலைவர் : இதுபோன்ற பிரச்னைகளுக்கு எப்படி சபாநாயகருடைய கவனத்தைக் கவர்வது என்பதற்கு விதிகள் உள்ளன, புத்தகத்தை படியுங்கள். அதைப் படித்த பின்னர் கவரலாம் திடீர் திடீர் என்று கவரக் கூடாது.

(ஆ) வினாக்களுக்கான விடைகள்

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களால் கேட்கப்பட்டவினாக்கள் எல்லாம், கேட்கப்பட்ட 49 நாட்களுக்குள் லிஸ்டிலே வரவேண்டும் என்கிற விதி இருக்கிறதே. ஆனால் நான் கேட்டு 42 மாதங்கள் ஆகி விட்டது. இதுவரையில் பதில் இல்லை. ஆகவே அந்த பதில்களை வாங்கிக் கொடுக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

1983 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கேள்விகள் என்ன என்று குறிப்பிட்டு எழுதி அனுப்புங்கள், நான் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பி பதிலைப் பெற்றுத் தருகிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: கேள்வி எண்கள் 1,023, 1,024 சபாநாயகர் அவர்கள் குறிப்பிட்டது போல் நான் அதை எழுதி அனுப்புகிறேன்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அமைச்சர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க வினாக்களை ஒத்தி வைக்கிறீர்கள். அப்படி ஒத்தி வைக்கப்பெறுகிறபோது மறுநாளே வரவேண்டும். ஆனால் என்னுடைய கேள்வி ஒத்தி வைக்கப்பட்டு 2,3 நாட்கள் ஆகின்றன. ஆனால் இன்னமும் அவைகள் அவையில் எடுக்கப் பெறவில்லை? அவைகள் எப்போது வரும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்கள் அடுத்த தினம் இந்த அவைக்கு வரும்போது வரும்.

3. ஒத்தி வைப்புத் தீர்மானம்

அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்துக்கு ஏற்பட்ட விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் மு. அம்பிகாபதி, பொ. உத்திராபதி, கே. எம். தங்கமணி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் கோயம்புத்தூரிலிருந்து புறப்பட்ட அண்ணா போக்குவரத்துக் கழகப் பேருந்து விபத்துக்குள்ளாகி அதனால் 6 பேர் மரணமடைந்ததாலும், பலர் படுகாயமடைந்திருப்பதாலும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலைகுறித்து விவாதிக்கப்பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாக கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது பஸ் விபத்து சம்பந்தமான பேருந்துமீதின் லாரி மோதியிருப்பதாகத்தான் நாங்கள் பேப்பரிலே பார்த்தோம். அண்ணா போக்குவரத்துக் கழக பேருந்தின் எதிரிலே வந்த லாரி அதன் மீது மோதியதின் விளைவாகத்தான் இந்த விபத்து நடந்து அங்கேயே 4 பேர்கள் மரணம் அடைந்தார்கள். 2 பேர் மருத்துவமனைகளிலே மரணம் அடைந்திருக்கிறார்கள் இப்படி விபத்துகள் அதிகரித்துவரும் இந்த நேரத்திலே இரவு நேரங்களிலே பேருந்துகளில் பயணம் செய்வதே பயங்கரமானதாக இருக்கிறது.